
சிறுவர் சஞ்சிகை
தேன்வதை
National College Of Education
Batticaloa
தொகுப்பு
ஆரம்பக்கல்வி - B ஆசிரியப் பயிலுநர்கள்



# மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரி

# பீடாதிபதியின் வாழ்த்துரை

மட்டக்களப்பு தாழங்குடா தேசிய கல்வியற் கல்லூரியில் ''தேன்வதை'' எனும் சிறுவர் சஞ்சிகை ஆரம்பக்கல்வி B மாணவர்களினால் வெளிவருவதையிட்டு கல்லூரியின் பீடாதிபதி என்றவகையில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

''கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக''

என்ற வள்ளுவன் வாக்கிற்கு அமைவாக கல்வியை குற்றமறக் கற்பதுடன் கற்றபடி ஒழுகுதல் இன்றியமையாததாகும். நாம் கற்ற வித்தைகளை மற்றவர்களுக்கு முறையாக பரிமாற்றம் செய்தல் ஆசிரியத்துவத்தின் அர்ப்பணிப்பான கொடையாகும். எமது கல்வியியற் கல்லூரி பலதிறன்வாய்ந்த ஆசிரியர்களை சமுதாயத்திற்கு வழங்கிக்கொண்டிருகின்றது. அந்தவகையில் சிறந்த வினையாற்றுகையுள்ள காலத்திற்கேற்ற அறுவடையாக இவ்வாசியப் பயிலுனர்களும் அவர்களின் ஆக்கங்களைத் தாங்கிய சஞ்சிகையும் விளங்குவதையிட்டு மகிழ்வடைகின்றேன்.

நல்ல நாற்றுமேடையில் நல்லமுறையில் வளர்க்கப்படும் பயிர்கள் நல்ல பயனைத்தருகின்றன. அதேபோல் இக்கல்லூரியில் கல்விகற்ற நல்ல ஆசிரியப் பயிலுனர்கள் பலதுறைகளில; சாதனைகள; படைத்த வண்ணமுள்ளனர். இவர்களின் நல்லறுவடைகளில் ஒன்றாக இச்சஞ்சிகை வெளிவருவது பாராட்டத்தக்கது. இவ்வறுவடை இத்துடன் நின்றுவிடாது வருடம் தோறும் நல்ல விளைவுகளுடன் புதுமைகளை மேலும் தாங்கி வரவேண்டுமென கேட்டுக்கொள்வதோடு இதற்குப் பக்கபலமாக இருந்த எமது கல்லூயின் உபபீடாதிபதிகள், வழிப்படுத்திய பொறுப்பு விரிவுரையாளர் திரு.க.கமலதாசன், மற்றும் படைப்பாளிகளான ஆரம்பக்கல்வி B ஆசிரியப் பயிலுநர்கள் என அனைவருக்கும் எனது இதயபூர்வமான பாராட்டுகளை தெரிவிப்பதில் பெருமிதம் அடைகிறேன்.

**திரு.T.கணேசரெத்தினம்**

**பீடாதிபதி**



# வாழ்த்துரை

மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆரம்பக்கல்வி B பிரிவினரால் தேன்வதை எனும் சிறுவர் சஞ்சிகை வெளிவருவதையிட்டு கல்வியும் தரமேம்பாட்டுக்கும் பொறுப்பான உபபீடாதிபதி என்ற வகையில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

ஆசிரியப் பயிலுநர்கள் இவ்வாறான எழுத்துப் பணிகளில் ஈடுபட்டு துறைசார் ஆற்றல்களை விருத்தி செய்து கொள்வது தமது வாண்மைத்துவத்தை வளர்த்துச் செல்வதற்கு உறுதுணையாக அமையும். இவ்வாக்கங்கள் சிறார்களின் சிந்தனையை தூண்டுவதுடன் மகிழ்வளிப்பனவாகவும் அமைந்துள்ளன.

இவ்வெளியீடு இத்துடன் மாத்திரம் நின்றுவிடாது வருடம் தோறும் மாணவர் சமுதாயத்தின் விருப்புக்குரிய சஞ்சிகையாக வெளிவரவேண்டும் என கேட்டுக்கொண்டு இதனை வழிப்படுத்திய பொறுப்பு விரிவுரையாளர் திரு.க.கமலதாசன் அவர்களையும் ஆரம்பக்கல்வி B பிரிவு மாணவர்களையும் மனதார பாராட்டுகின்றேன்.

**திருமதி W.மணிவண்ணன்**

**உப பீடாதிபதி**

**கல்வியும் தரமேம்பாடும்.**



## பொறுப்பு விரிவுரையாளரின் வாழ்த்துரை

எமது கல்வியியற் கல்லூரியின் ஆரம்பப்பிரிவு B மாணவர்களின் ஆக்கத்திறன் வெளிப்பாடுகளின் ஓரங்கமாக தேன்வதை எனும் சுவையான பல்சுவை மிகுந்த படைப்புக்கள் சஞ்சிகை வடிவில் வெளிவருவதையிட்டு பொறுப்பு விரிவுரையாளர் என்ற வகையில் பெருமிதம் கொள்கின்றேன்.

இத்தேன்வதை தொடர்ச்சியாக சிறுவர்கள் விரும்பிச் சுவைக்கக் கூடிய விடயங்களைத் தெள்ளித் திரட்டியதாக ஒவ்வொரு வருடமும் வெளிவரவேண்டும் என வாஞ்சையுடன் எதிர்பார்த்து வாழ்த்துகின்றேன்.

**பொறுப்பு விரிவுரையாளர்**

**திரு.க.கமலதாசன்**

# இதழாசிரியர் உரை

ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு ஆக்கத்திறன் என்பது இன்றியமையாத ஒன்றாக காணப்படுகிறது. அந்தவகையில் இவ்தேன்வதை சஞ்சிகையின் ஊடாக சிறார்களுக்கு தேவையான ஆக்கத்திறன் சார் விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.இம் முதலாம் பதிப்பில் சிறுவர்களுக்கு பயனுள்ள பொது அறிவு விடயங்கள்,சிறுவர் பாடல்கள், மொழிவளம், கதைகள், கட்டுரையாக்கங்கள், சிறுவர் ஓவியங்கள், விடுகதைகள் மற்றும் சிந்தனை துளிகள் போன்ற பல்வேறு இன்னோரன்ன ஆக்கங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

மிக இலகுவான மொழிநடையில் சின்னஞ்சிறார்களை கவரக்கூடிய விதத்தில் அமைந்துள்ள இவ்விதழ் வாசிக்கும் சிறுவர்களுக்கு மகிழ்ச்சியாகவும் தன்னாலும் எதையும் செய்ய முடியும் என்ற தன்னம்பிக்கையையும், தைரியத்தையும் அளிப்பதோடு ஆக்கத்திறன் சிந்தனையையும் தூண்டும் விதமாய் அமைந்துள்ளது.

சிறுவர்களுக்கு பயனுள்ள இவ்விதழை உருவாக்குவதற்கு பின்னணியாக இருந்து ஊக்குவிப்பையும், ஆலோசனைகளையும் வழங்கிய மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர் திரு க. கமலதாசன் ஐயா அவர்களுக்கும் இச்சஞ்சிகைக்காக தனது ஆக்கங்களையும், ஒத்துழைப்பையும் வழங்கிய இரண்டாம் வருட ஆரம்ப கல்வி B ஆசிரியர் பயிலுநர்களுக்கும் மேலும் இவ்விதழை வெளியிடுவதற்கு ஒழுங்கமைத்து ஏற்பாடுகளை செய்து தந்த கல்லூரியின் பீடாதிபதி திரு க.கணேசரட்னம் ஐயா அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன.

**ஆரம்பக்கல்வி ஆசிரியப்பயிலுனர்**




# தேன் வதைக்குள்........

- பாடல்கள்
- கட்டுரைகள்
- சிந்தனைத் துளிகள்
- பொது அறிவு
- ஆங்கில எழுத்துக்கள்
- விடுகதைகள்
- இலக்கங்கள்
- செய்து பார்ப்போம்
- சிங்கள எழுத்துக்கள்
- சிறுவர் ஜோக்ஸ்
- குறுக்கெழுத்துப் போட்டி
- கவிதைகள்
- ஒத்தகருத்துச் சொற்கள்
- சிறுவர் சுயசிந்தனை ஆக்கங்கள்
- உருவத்தை ஆக்குவோம்

# சூழல் மாசடைதல்



சூழல் தொகுதியில் மனிதன் நேரடியாக அல்லது மறைமுகமாக ஏற்படுத்தும் விரும்பத்தகாத அல்லது பாதகமான பெரும்பாலும் மீள முடியாத விளைவுகள் சூழல் மாசடைதல் எனப்படும்.

அபிவிருத்தியை நோக்கிய மனித நடத்தையினால் இன்று சூழல் அதிகளவில் மாசடைந்து வருகிறது. மனிதர்களுடைய அலட்சியப் போக்கு காரணமாக புவி தன் சமநிலையை இழந்து செல்கின்றது. இதன் காரணமாக சூழல் மாசடைகிறது.

சூழல் மாசடையும் வழிகளை எடுத்து நோக்குவோமையானால் சூழலானது பிரதானமாக நீர், நிலம், வளி ஆகிய வழிமுறைகளின் கீழ் மாசடைவுக்கு உட்படுகின்றது.

வேதியல் பொருட்களும் தூசியும் வெளியிடப்படுவதனால் வளி மாசடைகிறது. வாகனங்களாலும் தொழிற்சாலைகளினாலும் வெளியிடப்படும் ஹார்பன் மொனோக்சைட் இதில் முக்கியமானதாகும்.

மனித செயற்பாடுகளால் மற்றும் தொழிற்சாலைகளின் விவசாய நிலங்களில் இருந்தும் வெளியிடப்படும் திண்ம, திரவ கழிவுகள் நீர் நிலைகளில் கலப்பதனால் நீரானது மாசடைகின்றது. வேளாண்மையில் பயன்படும் உரங்கள், பூச்சி கிருமி நாசினிகள், களைகொல்லிகள் பயன்பாட்டால் மண் பெரிதும் பாதிப்படைகின்றது. இவ்வாறு சூழல் மாசடைவதன் காரணமாக சூழல் சமநிலையானது குழம்பப்படுகிறது. இதன் விளைவாக மனிதனின் உடல்நலம் பாதிப்படைகின்றது. வளி மாசடைவதனால் அதை சுவாசிக்கும் மனிதனுக்கு மூச்சு நோய், இதயநோய், தொண்டை எரிச்சல், நெஞ்சு வலி போன்றவை ஏற்படுகின்றன.

நீரினை குடிப்பதனால் வாந்திபேதி, கொலரா போன்ற நோய்கள் ஏற்படலாம். மேலும் நீர் மாசடைவானது நாள்தோறும் உலகில் ஏற்படக்கூடிய பல இறப்புகளுக்கு காரணமாக அமைகின்றது. அத்துடன் இந்த சூழல் மாசடைவானது உலகையே பாதிப்படையச் செய்யும் பூகோள வெப்பமயமாதலுக்கும் பிரதான காரணமாக அமைகின்றன.

சூழல் மாசடைவதை தடுப்பதற்கான வழிமுறைகளாக கட்டுப்பாடு வழிமுறைகளை பின்பற்ற வேண்டும. இதனை மீண்டும் பயன்படுத்துதல், பயன்பாட்டை குறைத்தல், சூழல் மாசடைதலலைத் தடுத்தல், சேதன பசளை பயன்பாடு ஆகிய நான்கு முறைகளில் நிறைவேற்றிக் கொள்ளலாம்.

அதாவது அழிவடையாத பிளாஸ்டிக் போன்ற பொருட்களை மீள்பாவனை செய்தல் அல்லது அவற்றினுடைய பாவனையை குறைத்தல், கழிவுகளை வெளியேற்றும் போது சுத்தப்படுத்தி வெளியேற்றல், அசேதன உரங்கள், கிருமி நாசினி போன்றவற்றை தவிர்த்தல், தேவையற்ற வாகனப் பயன்பாடுகளை குறைத்தல் என்பவற்றின் மூலம் நாம் சூழல் மாசடைவினை தடுக்க முடியும்.

சூழல் மாசடைவதனை தடுக்க சர்வதேச ரீதியிலும் பிராந்திய ரீதியிலும் தேசிய ரீதியிலும் பல அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் செயற்படுகின்றன. இவற்றின் பிரதான நோக்கம் விழிப்புணர்வு முதல் மற்றும் பல நிகழ்வுகள் ஊடாக சூழல் மாசடைதல் தடுப்பது ஆகும்.

உதாரணமாக ஐக்கிய நாடுகளின் சூழல் நிகழ்ச்சித் திட்டம், உலக சூழல் வசதி, தெற்காசிய கூட்டுறவு சூழல் நிகழ்ச்சித் திட்டம் போன்றவற்றை குறிப்பிடலாம். மேலும் இந்தியாவினுடைய கிரீன் பீஸ் இந்தியா, சூழல் பாதுகாப்பு நிறுவனம் ஆராண்யக் போன்ற நிறுவனங்களையும் கூறலாம்.

சூழல் மாசடைவு என்பதை தடுக்க தனி மனிதர் ஒவ்வொருவரும் உணர்ந்து செயற்பட வேண்டும். கழிவுகள் தொடர்பாக கவனமாக இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தாலே சுற்றுச்சூழல் மாசடைவினை பாரியளவில் குறைத்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

## “ஒன்று படுவோம் சூழலைக் காப்போம்.”



தேனாக்கம் --- A.R.FATHIMA UNAISA

# உணவும் மனிதனும்




- ✓ உணவுமனிதனுக்கு இன்றியமையாதது.
- ✓ உணவு இன்றேல் உயிர்வாழமுடியாது.
- ✓ மனிதனுக்கு சக்தி, பாதுகாப்பு, வளர்ச்சி என்பவற்றை உணவு வழங்குகிறது.
- ✓ தினமும் எல்லா போசணை அடங்கிய உணவுவகைகளையும் நாம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.
- ✓ மனிதனின் பழக்கவழக்கங்களில் உணவுப் பழக்கமும் ஒன்றாகும். இது கட்டுப்பாட்டுடன் பேணப்பட வேண்டும்.
- ✓ மனிதன் உண்ணும் உணவு சுத்தமானதாகவும் சத்துள்ள உணவாகவும் இருக்க வேண்டும்.
- ✓ நாம் உண்ணும் உணவு உடலை மட்டுமன்றி உள்ளத்தையும் தூய்மையானதாக வைத்திருக்க வேண்டும்.

தேனாக்கம் --- S . SASITHA


## செய்து பார்ப்போம்.......

### குவா குவா வாத்து!

1.



2.



3.



4.



தேனாக்கம் --- R . F. SUMAIYA

# The Mouse and the Lion



A Lion lay asleep in the forest, his great head resting on his paws. A timid little Mouse came upon him unexpectedly, and in her fright and haste to get away, ran across the Lion's nose. Roused from his nap, the Lion laid his huge paw angrily on the tiny creature to kill her.

"Spare me!" begged the poor Mouse. "Please let me go and some day I will surely help you."

The Lion was much amused to think that a Mouse could ever help him. But he was generous and finally let the Mouse go.

Some days later, while stalking his prey in the forest, the Lion was caught in the toils of a hunter's net. Unable to free himself, he filled the forest with his angry roaring. The Mouse knew the voice and quickly found the Lion struggling in the net. Running to one of the great ropes that bound him, she gnawed it until it parted, and soon the Lion was free.

"You laughed when I said I would help you," said the Mouse. "Now you see that even a Mouse can help a Lion."

“Kindness is never die.”

தேனாக்கம் --- A . H . FATHIMA HAFIYYA

## தெரிந்து கொள்ளுங்கள்.......

1. உலகின் மிகப்பெரிய தீவு ?
   கீறின்லாந்து
2. உலகின் மிகப்பெரிய பூ?
   ரப்லேசியா
3. எரிமலைகள் அதிகமாக உள்ள நாடு?
   இந்தோனேசியா
4. உலகின் மிகப்பெரிய நதி?
   மிசிசிப்பி
5. உலகில் மிக அகலமான நதி?
   அமேசன் நதி
6. சந்திரனில் முதன் முதலில் காலடி வைத்தவர்?
   நீல் ஆம்ஸ்ரோங்
7. சாதாரண வீடுகளில் வழங்கப்படும் மின்னின் அளவு?
   20 யு
8. வளிமண்டலத்தில் அதிகளவு உள்ள வாயு?
   நைதரசன்
9. திரவ நிலையில் உள்ள உலோகம்?
   இரசம்
10. உலகிலேயே அதிகளவு மழை கிடைக்கும் இடம்?
    சீராப்பூஞ்சி

தேனாக்கம் --- S . SASITHA

# The boy who cried wolf……



Once upon a time, there was a shepherd boy who used to take his flock of sheep to the hill to graze on the fresh green grass. Sitting there, he had nothing to do the whole day. One day, an idea struck him. To overcome his boredom, he cried out, "wolf! Wolf!" All the men came running with their sticks and to their shock found no wolf! The boy laughed.

Again after a few days, he cried out, "wolf! Wolf!" and the villagers again came running up the hill only to find that the shepherd boy had fooled them. He laughed and laughed, seeing that he had succeeded in fooling them again. However, this time, the villagers were very angry, and they told him that the next time he cries out for help, they would not come.

Next day when his flock of sheep were grazing, he suddenly saw a wolf. He cried out aloud "Wolf! Wolf!" But alas! No one came to rescue his sheep. The shepherd boy returned home crying only with few of his sheep. The wolf had taken away one of his sheep, and few of his sheep had fled. From that day onwards, he promised never to lie again.

"Never talk lie in your life."

தேனாக்கம் --- A . H . FATHIMA HAFIYYA

## விடுகதைகள்

1. தொப்பென்று விழுந்தான் தொப்பி கழன்றான் அவன் யார்?

   பனம்பழம்

2. ஒரு குப்பிக்குள் எண்ணெய் எடுத்தால் ஊர் எல்லாம் கல்யாணம் அது என்ன?

   நிலா

3. ஒருவர் ஆடுவார் ஒற்றைக் காலில் நிற்பார் அவர் யார்?

   தும்புத்தடி

4. பட்டையை பட்டையை கழற்ற பதினாறு பட்டையை கழற்ற முன்வருவாள் தேவியார் அது என்ன?

   சோளக்கதிர்

5. ஆயிரம் நூல் பின்னலை அள்ளி அள்ளித் தின்னலாம் அது என்ன?

   இடியப்பம்

6. வால் உண்டு ஆனால் உயிரில்லை அங்குமிங்கும் அலைவான் அவன் யார்?

   பட்டம்

7. அடித்தாலும் உதைத்தாலும் அழமாட்டான் அவன் யார்?

   பந்து

8. ஆயிரம் சிற்பிகள் செதுக்கிய பிரமாண்ட மாளிகை அது என்ன?

   தேன் கூடு

9. பார்த்தால் கல், பல் பட்டால் நீர் அது என்ன?

   பனிக்கட்டி

10. இதயம் போல் துடிப்பிருக்கும் இரவு பகல் விழித்திருக்கும் அது என்ன?

    கடிகாரம்

தேனாக்கம் --- M . M . MUMTHASH

## கவிதைகள்

### நட்சத்திரம்

இரவு வானில் ஜொலித்திடுமே

இரவு வானை அழகாக்கிடுமே

சிறுவர்களுக்கு மிகவும் பிடித்திடுமே

மனிதர்களை மகிழ்ச்சியாக்கிடுமே

அதன் பெயரே நட்சத்திரம்.




தேனாக்கம் --- K . KUHANTHINI

# ஒற்றுமை

பாடசாலை ஒன்றில் ஒரே வகுப்பில் ரகு, ஆதி, கதிர் ஆகிய மூவரும் கல்வி கற்று வந்தனர். அவர்கள் மூவரும் மிகவும் ஒற்றுமையானவர்கள். எங்கு சென்றாலும் ஒன்றாகத் தான் செல்வார்கள். ஒன்றாகத்தான் படிப்பார்கள். உணவினையும் ஒன்றாகப் பகிர்ந்து உண்ணுவார்கள். இந்த ஒற்றுமையைப் பார்த்து மற்ற மாணவர்களுக்கு பொறாமையாகக் கூட இருந்தது.

சுரேஸ் என்ற மாணவனுக்கு இவர்கள் மூவரையும் பாரத்து மிகுந்த பொறாமை எப்படியும் இவர்கள் மூவரையும் பிரித்தே தீருவேன். என்று சபதமிட்டான். சுரேஸ் தனது சூழ்ச்சியை பயன்படுத்த திட்டமிட்டான். அதன்படி மூவரிடமும் முதலில் நட்பை ஏற்படுத்திக் கொண்டான். சிறிது நாட்கள் சென்ற பிறகு, தனிமையில் இருந்த ரகுவிடம் சென்றான். “ரவி! நீ இவ்வளவு அழகாக இருக்கின்றாய் ஆனால். உன்னைப் போல் அழகாக அவர்கள் இல்லையே அப்படியானவர்களுடன் உனக்கு எப்படி நட்புப் பாராட்ட முடிகின்றது? என்று எல்லாம் கூறி ரவியின் மனதைக் கலைத்தான். ரவிக்கும் இவன் சொல்வதெல்லாம் உண்மையோ என்ற சந்தேகம் ஏற்படத் தொடங்கியது. வந்த காரியம் முடிந்த திருப்தியில் ஆதியிடம் சென்றான். ஆதியிடம் மெல்ல பேச்சைத் தொடங்கினான். ஆதியிடம் தனது சூழ்ச்சியை தொடங்கினான். “ஆதி நீ எவ்வளவு அறிவுடையவனாக இருக்கின்றாய். பரீட்சையில் முதல் புள்ளி எடுக்கின்றாய், அனைத்திலும் முதல் பரிசினை பெற்றுக் கொள்கின்றாய். அவ்வளவு அறிவுடைய நீ ஒன்றும் தெரியாத உனது நண்பர்களுடன் நட்பு கொள்வதா?” என்று சூழ்ச்சியைக் கிளப்பி விட்டான். சுரேஸ் கூறிய வார்த்தைகளால் ஆதி சிந்திக்கத் தொடங்க சுரேஸ் வந்த வேலை முடிந்த திருப்தியில் கிளம்பிச் சென்றான்.

இத்தோடு நின்று விடாமல் மூன்றாவதாக கதிரிடம் சென்றான் சுரேஸ். கதிரிடம்,“கதிர்! நீ எவ்வளவு வசதியானவன் உன்னை விட வசதியில் குறைவான உனது மற்ற இரண்டு நண்பர்களுடன் சுற்றித் திரிவது உனது அந்தஸ்த்துக்கு ஏற்ற காரியமா?” எனக் கேட்டன்.

இவ்வாறு சுரேசின் சூழ்ச்சியால் அந்த மூன்று நண்பர்களுக்குள்ளும் நாளடைவில் பகைமையும், யார் பெரியவன் என்ற சண்டை ஏற்பட்டது. ஒவ்வொருவரும் தங்களுக்குள் சண்டை போட்டுக் கொண்டனர். இதனால் ஒற்றுமையாக இருந்த மூவரும் தனித்தனியாகப் பிரிந்தனர்.

நடந்ததை கவலையுடன் பார்த்துக் கொண்டிருந்த இன்னுமொரு மாணவன் மூவரையும் அழைத்து சுரேசின் திட்டத்தைப் பற்றிக் கூறினான். “அடப்பாவி! எங்கள் ஒற்றுமைக்கு உலை வைத்து விட்டானே! அவனை நம்பி நல்ல நட்பை இழந்து விட்டோமே! என்று வருந்தினர்.

“திடீரென ஒருவர் வந்து தேவையில்லாமல் புகழ்ந்தால் அதற்கு மயங்கி விடக்கூடாது. அப்படி மயங்கி விடும் பலவீனம் ஒருவருக்குள் இருந்தால் மற்றவர்கள் விரைவில் தங்கள் வசப்படுத்திக் கொள்வார்கள். உங்கள் மூவரின் விசயத்திலும் அதுதான் நடந்தது. இனியாவது இப்படி திடீர் புகழ்ச்சிக்கு மயங்கி உங்களது நட்பையும் ஒற்றுமையையும் இழந்து விடாதீர்கள்” என்று அந்த மாணவன் மூவருக்கும் அறிவுறுத்தினான். அதன் பின் தங்களது தவறை உணர்ந்து மறுபடியும் மூவரும் நட்புடன் இருந்து வந்தனர்.



தேனாக்கம் --- M . F . ASRA

# கவிதைகள்



## முயற்சி


எதற்கும் அவசியமாம்...

எல்லோர்க்கும் அவசியமாம்...

இது இன்றி எந்த செயலும் முற்றுப்பெறாது..

எம் வாழ்விற்கு மிக முக்கியமானது...

அதன் பெயர் முயற்சியாம்.



## அப்பா

வீட்டின் தலைவனாம்

அதிக பொறுப்புகள் உடையவராம்

பெண்பிள்ளைகளுக்கு மிகவும் பிடித்தவராம்


பிள்ளைகள் மீது அன்பு நிறைந்தவராம்

பிள்ளைகளின் வாழ்வில் ஒளி ஏற்றுபவராம்

அவரே அன்புமிக்க அப்பா.

தேனாக்கம் --- K . KUHANTHINI

# புள்ளிகளை இணைத்து உருவத்தை ஆக்குவோம்




தேனாக்கம் --- R . F . SUMAIYA

# பூக்கள்.




தேனாக்கம் --- S . MONISHAN

# பேனை




அ எழுதத் தொடங்கிய காலம் முதல்

ஆறாம் விரலாய் ஒட்டிக்கொண்டாய்

உன் உதிரம் சிந்தி என் உரு கொடுத்தாய்.

நான் உயர்ந்திட வேண்டும் என்று

நாள் தோறும் காகித மைதானத்தில்

ஓட்டமாக ஓடிக் கொண்டிருக்கிறாய்

உனக்கு ஓய்வு வேண்டாமா?

ஏழையோ பணக்காரனோ என எண்ணாமல்

பாரபட்சமின்றி அனைவருக்காகவும்

சேவை புரிகிறாய்

உனக்கு எத்தனை நல்லெண்ணம்.

ஆத்திரம் கொண்ட கவிஞனின்

கையில் ஆயுதமாய் ஆகினாய்

காதல் கொண்ட இளைஞனின்

கையில் தூதுவனாய் ஆகினாய்.


உலகில் எத்தனை கோடி படைப்புக்களையும்

உருவாக்கட்டும் உன்னை விட

ஒரு சிறந்த படைப்பை உருவாக்கி விட முடியாது.

தேனாக்கம் --- S . FATHIMA HASEETHA

# UNITY IS STRENGTH…



Long ago there lived a flock of pigeons in deep forest. During the day time they used to fly all over the jungle and searching their food and water. They come back before the night fall. One day while searching of food, they saw rice and grains spread in the ground. All pigeons were hungry at the time so they decided to eat those grains. But a wise pigeon in the flock tried to stop because he suspect that it may be any trap by the hunter. But they didn't listened to him as they were very hungry. When They finished eating they tried to fly back, but they couldn't. Then they realized that they entrapped with the hunder's net. The pigeons couldn't move their legs as they got stuck in the net. but the old wise pigeon sat on a branch instead of eating the grains. The wise pigeon saw the hunder had come towards the net. Meanwhile the pigeons disseparately tried to free themselves from the net by pulling the net in their own directions. It didn't work. All the pigeons asked help from the wise pigeon to free them. He advised that stop pulling their own directions and try to fly up and carry the net with them. So, all at once flapped their wings together and flew up. Then the old wise pigeon took the entire flock with the to his one of friend mouse. The old wise pigeon requested his friend to cut the net and free the pigeons. The mouse agreed and immediately cut off the net. The pigeons thanked the mouse and the wise pigeon to save their lives.

The old wise pigeon said, "Unity had strength all. As long as you all stay united, no harm come upon you. It's your act of unity that saved your lives."

தேனாக்கம் --- M . F . ASRA

# வெண்ணிலவே



வெள்ளி நிற புன்னகையால்

பாரெங்கும் ஒளி சிந்தி

நட்சத்திரப் பட்டாளங்களுடன்

காரிருள் வானில் உலா வரும் வெண்மதியே!

நீ சில காலம் தேய்ந்தும்

சில காலம் வளர்ந்தும் காட்சியளிக்கின்றாயே

இதன் காரணம் தான் என்னவோ?

வாழ்க்கை என்பது இன்பம் நிறைந்து மட்டுமல்ல

துன்பமும் நிறைந்தது என்பதை உயர்த்துவதற்காகவோ?

தேனாக்கம் --- S . FATHIMA HASEETHA

## விஞ்ஞானமும் மனித வாழ்வும்

இன்றைய மனிதன் வேகமாக இயங்கிக் கொண்டிருக்கின்றான் என்றே கூற வேண்டும். ஆதிகாலத்திலிருந்து மனிதனது சிந்தனா சக்தியால் உருவானதே விஞ்ஞான வியப்புக்கள். மனிதன் ஏதோ ஒரு உந்து சக்தியால் தன்னை வருத்தியோ, பிறரின் எதிர்ப்புகளின் மத்தியிலோ, கடின ஆராச்சியின் விளைவாலோ பலவற்றைக் கண்டுபிடித்துள்ளான். கணினி, இணையம், உலகமயமாக்கல் என்பனவற்றின் புரட்சிமிகு நிலைகளே விஞ்ஞானமாக மாறியுள்ளது.



ஆதிகால மனிதன் தன்னுடைய வாழ்விடத்தை காடுகள், மலைக்குகைகளிலும் வாழ்ந்து வந்தான். இவ்வாறு வாழ்ந்தவன் படிப்படியாக தன்னுடைய அறிவாற்றலால் குடியேற்றங்களை அமைத்துக் கொண்டு காலப்போக்கில் விவசாயம், கைத்தொழில் என தொடங்கினான். குகைகளில் வாழ்ந்த மனிதன் இன்று தொடர்மாடி மனைவாழ்வு தொடர்மாடி மற்றும் விவசாயம் கைத்தொழில் என பாரிய புரட்சிகளுடன் செயற்பட்டு வருகிறான்.

விஞ்ஞான மறுமலர்ச்சி முதன்முதலில் ஐரோப்பிய நாடுகளிலும் அதைத்தொடர்ந்து அமெரிக்கா, ஆசிய நாடுகளிலும் ஏற்பட்டதன் விளைவாக பல அறிஞர்களும் ஆராச்சியாளர்களும் விஞ்ஞானிகளும் பல கொள்கைகளையும், கருத்துக்களையும் ஆராய்ந்து பல கண்டுபிடிப்புக்களை கண்டறிந்தனர். இதன் விளைவாக தொலைத் தொடர்புசாதனங்கள், போக்குவரத்து ஊடகங்கள், கைத்தொழிற்சாலைகள், மருத்துவசாலைகள், எரிபொருட்கள், போன்ற எண்ணரிய சாதனங்களும் கைத்தொழில்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

மனிதனுடைய அன்றாட வாழ்வில் கூட விஞ்ஞானம் தன்னுடைய அரிய பங்களிப்பை ஆற்றுகின்றன. தொலைத் தொடர்பு சாதனங்கள் முதல் போக்குவரத்து ஊடகங்கள் வரை விஞ்ஞான வளர்ச்சியானது மனிதனுக்கு அதிகமாக நல்ல விடயங்களையே அளிக்கின்றன. இணையத்தளங்களின் மூலம் பல அழிவுகரமான விடயங்களும் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. இணையத்தளத்தில் தீய அல்லது பார்க்கக்கூடாத இணையப்பகுதிகளைப் பார்வையிடுவதன் மூலம் முற்றுமுழுதாக அவர்கள் அதற்கு அடிமைகளாகவே மாறிவிடுகின்றனர். இதனால் அவர்களுடைய வாழ்கையே திசைமாறிச் செல்கின்றன ஒரு நிலை ஏற்படுகின்றது.எனவே மனிதனுடைய வாழ்வானது விஞ்ஞானத்தின் விருத்தியோடு பின்னிப் பிணைந்த ஒன்றாகக் காணப்படுகின்றது. மனிதனின் மூளை விருத்தியால் பல நன்மைகளைப் பெற்றிருந்த போதிலும் அதே மூளையால் மக்கள் விஞ்ஞாக வியப்பில் அமிழ்ந்து ஆனந்தம் கொள்ள வழியின்றி விழிப்பதையும் காணமுடிகிறது

தேனாக்கம் --- D . SUJANIYA

# சிந்தனை துளிகள்



- வாழ்க்கை எனும் வெளிச்சம் வாகை சூட உனக்குத் தேவை துணை அல்ல துணிச்சல்.

- எதை வீசினாலும் மக்கி அழிக்கும் மண் விதையை மட்டும் விருட்சமாக மாற்றுகிறது இதுதான் இயற்கை.

- வாழ்க்கையில் சில மனிதர்களிடம் கேள்வியையும் சில மனிதர்களிடம் பதில்களையும் எதிர்பார்க்காமல் இருப்பது மிகவும் நல்லது.

- கிடைக்காத வரை எது பெரிதாக தோன்றுகிறதோ அது கிடைத்ததும் அற்பமாக தோன்றும் இதுதான் வாழ்க்கை.

- நான் தவறி விழுந்தாழும் என்னை தூக்கி விட யாரையும் எதிர்பார்க்கவில்லை எனக்குள் ஒருவன் இருக்கிறான் அவன் தான் தன்னம்பிக்கை.

- வாழ்க்கை முழுவதும் கவலைகளை சேமித்து வைத்து அதைப்பற்றியே நினைத்துக் கொண்டிருந்தால் வாழ்வில் எதையும் சாதிக்க முடியாது.

தேனாக்கம் --- D . SUJANIYA

# சிறுவர் கவிதைகள்

## வண்ணத்துப்பூச்சி



கைப்படா வண்ணத்தில்

வர்ணம் பூசப்பட்ட ஓவியங்கள்

பதில் இல்லா கேள்வியாய்

பலர் மனதில் எழுகிறது

பறந்து திரியும் பட்டாம் பூச்சி மீது...



## பூ

தென்றல் வந்து விசிறி விட

தேன் வண்டு இசை பாட

பட்டிதழ் துயில் கலைந்து

பூத்தது தான்

பூவினமோ...

தேனாக்கம் --- A . F . ZAHIRA

# *Value of trees*




Trees are useful and beautiful gifts of nature. They provide immense wealth and riches for us. Trees give us flowers, fruits, timber,bamboos,fuels which are so necessary for us. They are also a great source of material for paper, rubber,gums,herbs and medicinal plants. Trees give us cool shade. They absorb carbon-di-oxide from the atmosphere and release oxygen which is needed for our life.

The roots of trees bind loose soil and prevent soil erosion. The top fertile soil is thus retained. This helps us in agriculture and food protection. The arrest of soil erosion also prevents silting and raising of river beds and possible overflowing of rivers causing floods.

Trees induce rain and prevent air pollution. They protect us from inclement weather. An area without trees soon becomes barren and turns into a desert in course of time. Trees thus help in maintaining ecological balance. Indeed,they play a great role in civilization. We should therefore avoid random felling of trees.

தேனாக்கம் --- M . MAFASA

# Alphabet




**A**

Ant - எறும்பு

Actor – நடிகர்

**B**

Bell - மணி

Butterfly- வண்ணத்துப்பூச்சி

**C**

Cup- கோப்பை

Candle- மெழுகுவர்த்தி

**D**

Dog- நாய்

Doll- பொம்மை

**E**

Earth- உலகம்

Elephant- யானை

**F**

Flower- பூ

Frock- சட்டை

**G**

Game- விளையாட்டு

Gold- தங்கம்

**H**

House- வீடு

Honey- தேன்

**I**

Idiot- முட்டாள்

Idol- சிலை

**J**

Journey- பிரயாணம்

Jump- பாய்தல்

**K**

Knife- கத்தி

King- அரசன்

**L**

Lamp- விளக்கு

Land- நிலம்

**M**

Monkey- குரங்கு

Money- பணம்

**N**

Neck- கழுத்து

Neck- கழுத்து

**O**

Owl- ஆந்தை

Onion- வெங்காயம்

**P**

Police- பொலிஸ்

Photo- புகைப்படம்

**Q**

Queen- அரசி

Quiz- வினாடிவினா

**R**

Ring- மோதிரம்

Red- சிவப்பு

**S**

Student- மாணவன்

Sand- மணல்

**T**

Teacher- ஆசிரியர்

Train- புகையிரதம்

**U**

Urban- நகர்ப்புறம்

Ugly- அசிங்கம்

**V**

Village- கிராமம்

Virus- கிருமி

**W**

Window- யன்னல்

Weight- நிறை

**X**

X ray- கதிரியக்கம்

Xmas tree- நத்தார் மரம்

**Y**

Yellow-மஞ்சள்

· Yawn-கொட்டாவி

**Z**

Zero-பூச்சியம்

Zebra- வரிக்குதிரை

தேனாக்கம் --- M . MATHUMITHA

# சிறுவனின் கடமைகள்

அறிவு பெற்றிடு தம்பி - தினம்
அன்பு செலுத்திடு தம்பி
உறவு வைத்திடு தம்பி - நீ
உயர்ந்து வாழ்ந்திடு தம்பி



கல்வி கற்றிடு தம்பி - நீ
கடமை ஆற்றிடு தம்பி
புலமை ஏற்றிடு தம்பி - நீ
புதுமை விதைத்திடு தம்பி



மடமை அகற்றிடு தம்பி
மதியை போற்றிடு தம்பி
உள்ளம் தெளிந்திடு தம்பி - தினம்
உண்மை உரைத்திடு தம்பி



கள்ளம் கலைந்திடு தம்பி - நீ
கருணை புரிந்திடு தம்பி
சிந்தனை செய்திடு தம்பி நீ
சிறப்பாய்த் திகழ்ந்திடு தம்பி
நிந்தனை நீத்திடு தம்பி - நீ
நீதியில் நிலைத்திடு தம்பி

தேனாக்கம் --- J . SUMITHRA

# Value of water




Water is the most important liquid for all living forms. It is not only necessary for our life processes but is also required for the functioning of our planet. Water is available in three states on the earth. Solid, liquid, and gaseous. Solid state includes glaciers, snow caps,ice sheets, and polar ice reserves. The liquid state includes rivers,seas, lakes,ponds, streams, oceans and geysers. The gaseous state includes water vapor found in the atmosphere. No matter which state it is in, the composition of water remains the same throughout. It is a powerful compound that nurtures all the life present on earth. Plants require water for photosynthesis and respiration.

Human require water for many different life processes like circulation, digestion, respiration and excretion, without water, life would be impossible on earth. As it is such an important compound. We must make sure that we conserve it so that I won't get exhausted soon

தேனாக்கம் --- M . MAFASA

# தமிழ் மொழி




என் தாய் கற்றுத்தந்த

இனிமையான எந்தன் மொழி

எப்போதும் நான் பேசும்

எளிய மொழி எந்தன் மொழி

அழகான சொற்கள் கொண்டு

ஆக்கப்பட்ட எந்தன் மொழி

அச்சமின்றி நான் பேசும்

அமுத மொழி எந்தன் மொழி

பண்பாடு வளர்க்கும் மொழி

பண்பான எந்தன் மொழி

பணிவோடு நான் பேசும்

பழமை மொழி எந்தன் தமிழ் மொழி.

தேனாக்கம் --- M . KIRSHANTHINY

# சிங்களப் பாடல்கள்




புஞ்சி பலு ராலே

மா கெதர நெதி வேழே

கவுத மகே போலே

பெரழ பெரழா

சிடியே மிதுலே

அபே கெதர கிடீ

ரெட கன்னே ரொடீ

தென் ஹொந்தடம நிதீ

மகென் கனவா குடீ




தேனாக்கம் --- M . KIRSHANTHINY

# சிறுவர் கவிதைகள்

## நதி

ஓடி வரும் நதி

அழகான நதி

பள்ளமான இடங்களிலும்

பாய்ந்து வரும் நதி

காடு மேடு எல்லாம்

கடந்து வரும் நதி





## மழை

மழையே மழையே

வண்ண மழையே

என்னோடு விளையாட

வந்திடு மழையே

## நிலா



நிலாவே நிலாவே

வெள்ளை நிலாவே

வானில் தெரியும்

வட்ட நிலாவே

தொட்டு பார்க்க வந்திடு நிலாவே

தேனாக்கம் --- Y . KASHTHURI

# பூக்கள்



புதுத் தென்றல் வீசி வர..

புது விடியல் சேர்ந்து வர..

புத்தம் புது பூக்கள் பொழிவாய் வர..

புத்துணர்வும் பிறக்குதம்மா..

புன்னகையும் பூக்குதம்மா..

பூலோகம் நீ வருகையிலே..!!!

அழகாய் வண்ணம் தொட்டு..

அடுக்கடுக்காய் நீ வளர்கையிலே..

அத்தனையும் மறந்து ரசிக்கிறேன்..

அந்த ஆனந்தத்திலே சிரிக்கிறேன்..!!!

வட்டமிட்டுத் திரியும் பட்டாம் பூச்சியும்..

வண்ணமலர் உனை நாடி வர..

வையகத்தில் ஓர் அழகு கூடுதம்மா..

வர்ணிக்க வார்த்தைகளும் இல்லையம்மா..!!!

பாவையவள் முகர்ந்து விட்டு..

பட்டிதழை வருடி விட்டு..

பறித்தே கார் குழலில் சூடிட..

பரவசத்தில் மகிழ்கிறாள்..

பால் வெளியில் மிதக்கிறாள..!!!

தேனாக்கம் --- A . G . FAZEEHA BEGUM

# சிறுவர் கவிதைகள்

## வானம்

நீல நிற வானம்
நீண்டு விரிந்த வானம்
நீல கடலின் மேலே
தொட்டு நிற்கும் வானம்



## நட்பு



பூத்துக் குலுங்க தவம் இருக்குதே
நந்தவனம்
தடம் பதிக்க காத்துக் கிடக்குதே
நம் நட்பு

## பூக்கள்

பூக்கள் பூக்கள்
வண்ணப் பூக்கள்
அழகாய் மலர்ந்த
பல நிறப் பூக்கள்



தேனாக்கம் --- Y . KASHTHURI

## சிறுவர் சிந்தனைப்பகுதி













தேனாக்கம் --- A . R . FATHIMA UNAISA

# நிலவுப்பாட்டு




வானத்திலே தெரியுதம்மா வட்ட நிலவு –

அதை வட்டமாக செய்தது யார்?

சொல்லு எனக்கு

பூமியிலே சிறகடிக்கும் சிறுமி எனக்கு

அதில் ஓடியாடி கூடிவாழ ஆசை இருக்கு

வெள்ளை ஒளி வீசிடுதே இந்த நிலவு-

அதற்கு வர்ணம் பூசி பார்ப்பது தான் எந்தன் கனவு

பிள்ளை மனம் ஏங்கும் நிதம் உன்னைக் காணவே

பட்டப் பகலில் உன்னைக் காணவில்லை

பள்ளி சென்றாயோ?

தேனாக்கம் --- M . KIRSHANTHI

# சுத்தம்




சுத்தம் பற்றி ஒரு கவிதை
சொல்லப் போறேன் நானிப்போ
சுத்தம் சோறு போடுமென்று
சொல்லி வைத்தனர் நம்முன்னோர்
சுத்தமாக வாழ்பவரை
சுகக்கேடு அணுகாது
அக்கம் பக்கம் உள்ளவரும்
அருமை என்றே போற்றிடுவர்
காற்று சுத்தமாயிருந்தால்
கனவிலும் நோய்கள் நெருங்காது
சுற்றுப் புறத்தை அதனாலே
சுத்தமாக வைத்திருப்போம்.
வீட்டில் சேரும் குப்பைகளை
வெளியில் போட மாட்டேன் நான்
குப்பைத் தொட்டி இருக்கிறதே
கொண்டு அதிலே போட்டிடுவேன்.

தேனாக்கம் --- R . THANSHIKA

# சிறுவர் ஓவியங்கள்



சி.பாத்திமா.நிஹ்லா

தி.்.இடியமன் அல் மின்ஹாஜ் வித்தியாலயம்

தரம்-03

கிண்ணியா



ம.பாத்திமா.அஸ்திகா

தி.்.இஹ்ஸானியா மகளிர் மகா வித்தியாலயம்

தரம்- 02

கிண்ணியா

தேனாக்கம் --- M . M . MUMTHASH

# மாயதேசம்



கழுகுகள் கோழிக்குஞ்சுகளை தேடுகிறது.

இரைக்காக அல்ல இணைவுக்காக வேண்டியே.

புலியும் மானும் தோழமை பூண்டது. வானவில் வளையம் மண்ணிலே நிலைபெற

புன்னகை மந்திரம் எங்கிலும்

பரவுது. ஏழைகள் முதலாளி ஏற்றங்கள் எங்குமில்லை.

கோழை களவாளி சீற்றமும் தங்கவில்லை.

சாதியும் மதமும் ஒன்று எனவே

ஆகியது.

பசி என்னும் பாவியை உலகம்

மறந்திட. அன்பெங்கும் அடை மழையாகி பாய்கிறது.

மிருகமும் மனிதனும் உதவிகள்

பகிர. இயற்கையும் மனிதனை மன்னித்து ஏற்றிட.

பூமியே சொர்க்கமாகி வாழ்க்கையும் இனிக்கிறது.

சூரியன் வீடெறிச்சுட கண்திறந்தேன். அப்போதுதான் உணர்ந்தேன்... அத்தனையும் கனவு என்னும்

மாயதேசம்.

தேனாக்கம் --- S . NIROJINI

# சிறுவர் சித்திரம்









ஆது.அரீஜ் ஜன்னத்
தரம்-03
மட்.்.ஓட்டமாவடி ஸாஹிரா வித்தியாலயம்



சு.சஜீதா ஸைனப்
தரம்-01
மட்.்.ஓட்டமாவடி ஸாஹிரா வித்தியாலயம்

தேனாக்கம் --- R . F . SUMAIYA

# இந்துஅராபிய இலக்கங்கள்

| | | |
|---|---|---|
| 1 | ஒன்று |  |
| 2 | இரண்டு |  |
| 3 | மூன்று |  |
| 4 | நான்கு |  |
| 5 | ஐந்து |  |
| 6 | ஆறு |  |
| 7 | ஏழு |  |
| 8 | எட்டு |  |
| 9 | ஒன்பது |  |
| 10 | பத்து |  |

தேனாக்கம் --- M . M . MUMTHASH

## ஒத்தகருத்துசொற்கள்

1. அகிலம் - பூமி
2. அடவி - காடு
3. அனல் - நெருப்பு
4. அகம் - மனம்
5. அடி - பாதம்
6. ஆழி - சிங்கம்
7. ஆனந்தம் - மகிழ்ச்சி
8. ஆகாரம் - உணவு
9. ஆன்மா - உயிர்
10. ஆற்றல் - வலிமை
11. இல்லம் - மனை
12. இன்பம் - மகிழ்ச்சி
13. இறுதி - கடைசி
14. இடர் - இடையூறு
15. இலாபம் - ஆதாயம்
16. ஈகை - விருப்பம்
17. உண்மை - சத்தியம்
18. உலகம் - பார்
19. உறக்கம் - நித்திரை
20. உத்தரவு - கட்டளை
21. ஏடு - புத்தகம்
22. ஐயம் - பயம்
23. ஒளி - வெளிச்சம்
24. ஒலி - சத்தம்
25. கடல் - சமுத்திரம்
26. நாடு - தேசம்
27. வீதி - தெரு
28. விளக்கு - தீபம்
29. சூரியன் - கதிரவன்
30. குளம் - வாவி

தேனாக்கம் --- A . H . L . AKLIYA

# கல்வி




தேனாக்கம் --- S . KALPPANA

# பாப்பாவின் பந்து



பாப்பா விளையாடும் பந்து....

பறந்து பறந்து போகுதே....

தண்ணீருக்குள் விழுந்த பந்து....

தவழ்ந்து மேலே வருகுதே....

தவழ்ந்து வரும் பந்தினையும்....

தாவி நாயும் பிடித்திடுமே....

சத்தம் இன்றி மெதுவாக

தவழ்ந்து நாயும் ஓடியதே....

பாப்பா பின்பு கண்ணீருடன்....

கடைத் தெருபக்கம் போயிடவே....

அங்கு வந்த அன்பு அப்பா....

பாப்பாவிற்கு பரிசு கொடுத்தாரே....

தேனாக்கம் --- N . KANANATHAN

# Money is nothing than love



Two years ago, I read a Chinese folk story that impressed me.

A husband and wife lived in a small town. They were poorThey lived happily. Although they had no money, they had more love and support to share each other. As it stands in all they were concerned a happy. Wife had long silky hair which her husband liked very much. Husband had a watch which he thought it was a treasure.

It was the winter season and Christmas celebrations started in the whole town. Husband was worried he had no money to buy a Christmas gift for his loving wife. He had a thought in his mind.

It wasn't an issue if he had no money, but he had a watch. As soon as the thought rose, he ran to a pawn broker and asked to take the watch and give money. When the pawn broker gave him the money, he went to another shop and bought a gold comb for his wife and returned home with an imagination of his wife's happy reaction.

At the same time wife went to a salon and entered to talk her beautiful hair that her husband liked. The salon owner cut her silky hair to make a wig and paid her money.

She took the money and ran to the shop and bought a gold chain for her husband's watch. She reached the house and covered her head with a scarf.

Husband gave the gift box that contained a gold comb. Immediately she hid her sorrow and take it with a smile and deliver the parcel to her husband. He unwrapped it and saw a gold chain glittered in it. They looked at each other with a big grief and tears fell down from both of their eyes.
There weren't any words....

தேனாக்கம் --- S . SHAMLA

# சிறுவர் நாம்



களங்கம் இல்லா உள்ளத்துடன் காண்கின்ற கடவுளாய்
இயந்திரமான இவ்வுலகினிலே இயந்திரமாக
வாழும் எங்கள் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக மாற்றும்
வண்ணப் பூக்களாகிய எமதுசெல்வங்களே….
உங்களிற்கு என்று ஓர தினமாம் அதுவே சிறுவர் தினமாம்…
பல நாட்களினைக் கடந்து வந்தாலும்
இந்த சிறப்பான நாளினை இனிமையாக்க
வந்த தெய்வம் நீங்கள்……

உலகிலேயே சுவர்க்கம் நரகம்
இரண்டு உண்டு எனில்
சுவர்க்கம் இருக்குமிடம் நீங்கள் இருக்கும் இடமே….
சின்னஞ் சிறு கிளியேகண்ணம்மா
என பாரதி கண்ணனைக் கூறினான்
என்றால் அது தற்காலத்தில் சிறுவர்களாகிய
உங்களையே சாரும்…..

இனியொரு விதி செய்வோம்
என்றான் பாரதி ஆனால் அதனை மாற்றி
இனியொருயுகம் படைக்கப் போகின்றீர்கள் நீங்கள்….
பூ போன்ற உங்கள் மனதை புண்ணாக்க
ஒரு போதும் விடமாட்டோம்
புன்னகையிலே உங்களை காத்து
வளர்த்திடுவோம் நாம்…

போகும் பாதையிலே ஆயிரம் தடைகள்
உங்கள் முன் வந்தாலும் அதனை தாண்டியும்
உங்களை காத்து நீங்கள் நீங்களாகவே வாழ
நாங்கள் வகுத்து தருவோம் நல்ல பாதையை…..

தேனாக்கம் --- N . KANANATHAN

# சிறுவர் கவிதைகள்

## நிலா



தினம் வரும் இரவினில்

கருமையைவெண்மையாக்க

பக்குவமாய் பெற்றெடுக்கிறாள்

வானத்து அன்னை

வட்டமான நிலவினை....

## சூரியன்



காலை பொழுதினில்..

கண்ணை கசக்கி

வாசலில் கால் பதித்து

வானத்தை அண்ணாந்தேன்

ஆஹாஅற்புதம்

நிலாப் பழமாய்

அங்கே அழகு சூரியன்

தேனாக்கம் --- A . F . ZAHIRA

# நல்ல நூல்களே நல்ல நண்பர்கள்

‘‘விலங்கோடு மக்கள னையர் இலங்கு நூல்
கற்றாரோடு ஏனையவர்’’ என்கிறார் வள்ளுவர்.


கல்வியறிவுடையோரே மனிதர் என்றும் கல்வியறிவற்ற ஏனையவர் விலங்குகள் என்றும் விளக்குகிறது இக்குறள். இதன் மூலம் கல்வியறிவு படைத்தோரையே இவ்வுலகு மனிதர்களாக மதிக்கும் என்பது புலனாகிறது. மனிதன் மனிதனாக மதிக்கப்பட வேண்டுமாயின் அவன் கல்வி அறிவை தேடிக் கொள்ளுதல் வேண்டும். கல்வி அறிவினைப் பெற்றுக் கொள்வதற்குப் பலவழிகள் உண்டெனினும் அவற்றுள்ளே மிகச் சிறந்தது நூல்கள் மூலம் பெற்றுக் கொள்ளுதலே ஆகும். நூல்கள் மூலம் அறிவைப் பெற்றுக்கொள்ளவேண்டுமாயின் நாம் நூல்களை நன்கு வாசிக்க வேண்டும். வாசிக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்வதன் மூலமே சாத்தியமாகும்.

‘‘என்னை என்றும், எச்சந்தர்ப்பத்திலும் கைவிடாத நண்பர்கள் புத்தகங்களே’’ என்றான் ஆங்கிலன் கவிஞன் ஒருவன். இதனாலேயே நல்ல நூல்களை நண்பர்கள் ஆக்கிக் கொள்ளுங்கள் என்று அறிஞர்கள் வலியுறுத்துகிறார்கள். இளமைப் பருவம் இனியது. இப்பருவத்திலே நூல்களை வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்விதம் ஏற்படுத்திக் கொண்டால் நமது மொழியாற்றல் விருத்தியுறும். பாடங்களிற் சிறப்படைய முடியும். வாழ்க்கை முழுவதும் நாம் மகிழ்ச்சியாக இருக்கக் கூடிய வழியைக் கண்டு கொள்ளலாம். நூல்கள் பல தரப்பட்டவை. வரலாறு, சமயம், தத்துவம், விஞ்ஞானம், இசை, புனைகதை, விளையாட்டுளனப் பல்வேறு வகைப்பட்ட நூல்கள் உள்ளன. இவற்றை நமது விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து படிக்க வேண்டும். நமது எதிர்கால முன்னேற்றத்திற்கு வாழ்க்கைக்குப் பயன் தரும் நூல்களை அறிந்து கற்றல் வேண்டும். சோர்வு ஏற்படும் வேளைகளில் எல்லாம் நாம் நூல்களைத் துணைக்கொண்டால் வேறுதுணை நமக்குத் தேவைப்படாது. புத்தகங்களைப் படிக்கும் பழக்கம் உள்ளவர்கள் ஒருபோதும் தனிமை உணர்வை பெறுவதில்லை. ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் அவர்கள் புத்தகங்களை நாடிச் சென்று விடுவதே இதற்கு காரணமாகும். வாழ்க்கையில் ஏற்படும் சோர்வுகளை தோல்விகளை அவர்கள் விரும்பிய நூல்களை வாசித்து அவற்றின் மூலம் போக்கிக் கொள்வர். நூல்கள் நமக்கு அறிவைத் தரும் அரிய செல்வங்கள் வேறு செல்வங்களைக் கள்வர்கள் களவாடிச் சென்று விடலாம். ஆனால் புத்தகங்கள் தரும் அறிவுச் செல்வத்தை நம்மிடமிருந்து எவருமே கவர்ந்திட முடியாது. இதனால்தான் புத்தகங்களைப் போன்ற சிறந்த கருவூலம் எதுவும் மனிதனுக்கு இருக்க முடியாது என்றார். ஆங்கில அறிஞர் ரஸ்கின் புத்தகங்களால் ஒருவன் பெறும் அறிவை இன்பத்தை மற்றவர்கள் தட்டிப் பறித்திட முடியாது. வாழ்நாள் முழுவதும் அவை அவனுக்குப் பயன் தரும். நூல்கள் படிக்கின்ற பழக்கம் இல்லாதவனின் வாழ்க்கை சூனியமாகிப் போகும் . கிணற்றுத் தவளை போன்றே அவன் கருதப்படுவான்.

பொழுது போக்கிற்காகவும் சிலர் நூல்களை படிக்கின்றார்கள். அத்தகைய நூல்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு மட்டுமே படிப்போருக்கு மகிழ்ச்சியை அளிக்கின்றன. கற்பனைக் கதைகள், நாவல்கள் என்பன இந்த வகையில் அடங்கும். கற்பனைக் கதைகளை மட்டும் படித்து விட்டு ஏனைய நூல்களை ஒதுக்குதல் கூடாது. கற்பனை உலகில் நாம் வாழ்ந்திட முடியாது. நமது உள்ளத்திற்கு நலம் தரும் நூல்களை நாம் தெரிந்து கற்க வேண்டும். நல்ல சிந்தனை அடங்கிய நூல்களே நாம் தெரிந்து கற்க வேண்டும். நமது அறவு வளர்ச்சிக்கு துணைபுரியவல்ல நூல்களைத் தேடிக் கற்றால் அவை எமது வாழ்க்கைக்கு பயன் தரும்.

நல்ல நூல்களை கற்பதால் அறிவால் மட்டுமின்றி உணர்வால், உள்ளத்தால் உயர்வடைய முடியும். உலக மக்களோடு உறவு கொள்ள முடியும். நமது பண்டைய வாழ்கை முறைகளை,விழுமியப் பண்பாடுகளை நன்குணர்ந்து அதற்கமைய நம் வாழ்க்கையையும் அமைத்திட முடியும். ‘‘வாசிப்பு ஒரு மனிதனை பூரணமாக்கும்’’ என்பர் அறிஞர்.

நமக்கு அறிவு புகட்டும் ஆசானாக அவை அருகிலிருக்கும் போது நாம் அவற்றை பயன்படுத்த தவற விடக்கூடாது. நல்ல நூல்களே நல்லநண்பர்கள் என்பதை நன்குணர்ந்து புத்தகங்களை வாசிக்கும் பழக்கத்தைகைக் கொள்ள வேண்டும். வளரும் சமுதாயத்தின் தலையாய கடமை இதுவாகும். இவ்வுலகில் வாழும் காலம் மிகச்சிறியது கல்வியோ கரையற்றது.




தேனாக்கம் --- Y . YUHANTHANA

# சிறுவர் ஓவியங்கள்



ஆ.கு. ஹனா

மட்.:. டாக்டர் அகமட் பரீட் வித்தியாலயம்

தரம்-04

ஏறாவூர்



ா்.கு. அமானி

மட்.:.மம.:. ஏறாவூர் அறபா வித்தியாலயம்

தரம் - 05

ஏறாவூர்

தேனாக்கம் ---M . RAKSHANA



# தாய்மையை போற்றுவோம்

மாதர் தம்மை

இழிவு செய்யும் மடமையை கொளுத்துவோம்

என்னை இயன்றவளும் பெண் தான் என்று

மார்தட்டி மகிழுவோம்

பூமி முழுக்க

அன்பை நிரப்பும்

அவள் பெருமையை பரைசாற்றுவோம்

தாய்மை அன்றி

தரணியிலே உயர் தெய்வமில்லை என்றே உரக்க முழுங்குவோம்

அன்னை என்றும்

தங்கை என்றும்

மனைவி என்றும்

மகள் என்றும்

தோழி என்றும்

இறைவன் வடிவை

இதயத்தில் வைத்தே வணங்குவோம் இனிக்க இனிக்க

நா பழகும் பைந்தமிழும் ஓர் தாய் தானே

தேவன் என்றும் அசுரன் என்றும்

அறிந்தும் கூட நம்மை சுமக்கும் பொறுமை பூமி கூட தாய் தானே

உயிரை காக்கும்

தாகம் தீர்க்கும் நீர் கூட ஓர் தாய் தானே

தாய்மை இன்றி மிருகங்கள் கூட வாழ்தல் இல்லையாம்

தன் குருதி திரித்து

தாய்ப்பால் தந்த தாய்மையை போற்றுவோம்...

தேனாக்கம் --- S . KARTHTHIKEYAN

# <u>சிறுவர் சுய சிந்தனை ஆக்கங்கள்</u>











தேனாக்கம் --- M . RAKSHANA

# கவிதைகள்

## நல் ஒழுக்கம்



நாட்டில் இருக்க வேண்டுமே ஆராய்ச்சி

வெரும் நடப்பில் இருக்காதே ஆட்சி

வேரோடு களைந்துவிடு தீயதை

வேரூன்றி வளர்த்துவிடு நல்லதை.

## தாயின் கருவறை



என் இதய துடிப்பிற்காய்

அன்னையவள் துடிதுடித்து

அழகாய் காத்த

அருமையான அறை

தேனாக்கம் --- Y . KASHTHURI

# சிறுவனின் கனவு



ஓர் ஏழைச் சிறுவன் அவனது தந்தையுடன் ஒரு கிராமத்தில் ஒரு சிறு குடிசையில் வாழ்ந்து வந்தான். அவனது தந்தையும் அவனும் நகர்ப்புரத்திற்குச் சென்று கழிவுத் தொட்டிகளிலும் வீதி ஓரங்களிலும் கிடக்கும் பிளாஸ்திக்கு போத்தல்களைச் சேகரித்து விற்றுக் கிடைக்கும் சிறிய வருமானத்தைக் கொண்டு தமது அன்றாடத் தேவைகளை நிறைவேற்றிக் கொண்டனர். சிறு பிள்ளைகளின் மனதில் எவ்வளவோ ஆசைகள் நிறைந்திருக்கும் போது இச்சிறுவன் தனது கால்களில் பாதணி அணிந்து நடக்கவே ஆசைப்பட்டான். தார் வீதிகளில் வெறும் கால்களுடன் தந்தையின் பின்னால் ஓடி ஓடி போத்தல்களைச் சேகரிப்பான்.

“ஒரு நாள் தந்தையுடன் பிளாஸ்திக் சேகரிப்பதற்காக நகர்ப்புரத்திற்குச் சென்றிருந்தான். அந்த நாள் என்றும் இல்லாதது போல வெயில் கொழுத்தியது. களைப்புற்ற அவர்கள் மூடப்பட்டிருந்த கடை வாசலில் இளைப்பாறினர். அப்போது தன் எதிரே ஒரு பெரிய பாதணிக்கடை இருப்பதைக் கண்டனர். “இவ்வளவு நாளாக இக்கடையை நாம் காணவில்லையே…..” என கடையை பிரமிப்போடு பார்த்துக் கொண்டிருக்கும் போது தனது தந்தை தன் கைகளை பிடித்துக் கொண்டு கடைக்குள் சென்றார். எனது உள்ளம் சந்தோசத்தில் குதுகலித்தது. கடையை சுற்றும் முற்றும் பார்த்தான், எங்கு பார்த்தாலும் வகைவகையான

பாதணிகள், ஓடிச் சென்று கையில் ஒரு பாதணியை எடுத்தான். அதைக் கண்ட கடைக்காரன் என் அருகில் வந்து ‘‘மரியாதையாக பாதணியை இருந்த இடத்தில் வை.

இவை மிகவும் விலை உயர்ந்தவை. உன்னால் இங்குள்ள எந்தப் பாதணியையும் வாங்க முடியாது.’’ என அவனைக் கடிந்தார்.

தன் கண்களில் இருந்து கண்ணீர் கசிந்தது. ஆனாலும் தான் அந்தப் பாதணியை கீழே வைப்பதாக இல்லை. பாதணியை அணைத்துக் கொண்டு ‘‘தான் இதை வாங்கியே தீருவேன்.’’ என சத்தமாகக் கத்தினான். தான் கத்திய சத்தத்திற்கு ஓர் வான தேவதை அவன் அருகே வந்து அவனது தலையை தடவி கையில் இருந்த மந்திரக் கோலை அசைக்க அவனது கால்களில் அந்தப் பாதணிகள் அணிவிக்கப்பட்டது. கால்களைக் குனிந்து பார்த்த அவன் பூரிப்படைந்து அப்பாவை திரும்பிப் பார்த்தான்….பின் தன்னைச் சுற்றி கண்களை உருட்டினான். பாதணிக் கடையை காணவில்லை. தலையைத் தடவிக் கொடுத்த வண்ணம் அப்பா எதையோ சிந்தித்துக் கொண்டிருந்தார். ஒரு பிளாஸ்டிக் போத்தலை அணைத்தபடி எனது தந்தையின் மடியில் சாய்ந்திருந்தான். கால்களை பார்த்தான் வழமை போன்று அவை வெறுமையாகவே இருந்தன. அருகில் நின்ற தேவதையையும் காணவில்லை.’’

அப்பொழுதுதான் அனைத்துமே கனவு என்பது அவனுக்குப் புரிந்தது. கண்களின் ஓரங்களில் கசிந்திருந்த நீரைத் துடைத்தவனாக, தன் கனவை நனவாக்க தான் கடுமையாக உழைக்க வேண்டும் என்ற மன உறுதியுடன் எழுந்து நின்றான்.

தேனாக்கம் --- R .F . Sumaiya

# தாய்க் குரங்கும் குட்டி குரங்கும்



ஓர் ஊரில் இரண்டு குரங்கு இருந்ததாம். ஒரு குரங்கு தாய்க் குரங்கு அடுத்த குரங்கு குட்டிக் குரங்கு ஒருநாள் குட்டிக் குரங்கு ஐஸ்கிரீம் கேட்டதாம். அதற்கு தாய்க் குரங்கு சொன்னதாம் நீ மரத்தில் இரு நான் போய் வேண்டித்து வாறன் என்றதாம். குட்டிக் குரங்கு சொன்னதைக் கேட்காமல் கீழே இறங்கியது. அதனின் வாலில் முள்ளுக் குத்தியதாம் குட்டிக் குரங்கு கத்தியது. அவ்வழியே ஒருவர் கத்தியுடன் நடந்து வந்தார். அவரிடம் முள்ளை எடுத்து விடச் சொன்னது. அவர் முள்ளை எடுக்க முடியாமல் வாலை வெட்டி விட்டார். குரங்கு கத்தியது. வாலைத்தா இல்லாட்டி கத்தியை தா என்றது. அவர் கத்தியை கொடுத்துவிட்டு சென்றார்.

குட்டிக் குரங்கு அவ்வழியே நடந்து வந்து சென்றது. ஒருவர் மரத்தில் விறகு முறித்துக் கொண்டு இருந்தார். குரங்கு அவருக்கு கத்தியைக் கொடுத்து அவர் வெட்டும்போது கத்தி உடைந்துவிட்டது. குரங்கு கத்தியைத் தா இல்லை என்றால் கொள்ளியை தா என்றது. அவர் கொள்ளியைக் கொடுத்து விட்டு சென்றார். அவ்வழியே குரங்கு வந்தபோது ஒரு பாட்டி விறகில்லாமல் ஓலைகளை வைத்துக் கொண்டு அப்பம் சுட்டார். குரங்கு கொள்ளியை கொடுத்தது. பாட்டி அப்பம் சுட்டார். விறகு எரிந்துவிட்டது. குரங்கு கேட்டது என்ட கொள்ளியைத் தா இல்லை என்றால் அப்பத்தை தா என்றது. பாட்டி அப்பத்தை கொடுத்து விட்டு சென்றார். அவ்வழியே குரங்கு வந்த போது மேளத்துடன் ஒருவர் வந்தார். அவர் மிகுந்த பசியுடன் வந்தார். குரங்கு அப்பத்தை அவரிடம் கொடுத்தது. அவர் சாப்பிட்டு விட்ட பின்னர் குரங்கு என்ட அப்பத்தை தா இல்லை என்றால் மேளத்தை தா என்றது. அவர் மேளத்தை கொடுத்து விட்டு சென்றார். குரங்குக்குட்டி மேளம் அடித்து பாட்டுப் பாடி சென்றது

தேனாக்கம் --- K. Nithosha

# இயற்கை



வண்ண மலர்கள் பசுமையுடன் மணம் வீச

வான் முகிலும் நெஞ்சகத்தினை நிறம் தீட்ட

கானகத்தின் வண்டினங்கள் அருமையான இசை மீட்ட

மின்னலென மின்மினியும் பட்டென உதிர்த்ததுவே

இயற்கை அன்னையின் எழில் மிகு வண்ணத்திலே

அறிவியலின் உன்னதமோ அழகியலின் மெய்யியலோ

உன் அழகினை இரசிப்பதற்கு எத்தனிக்கிறது என்மனமும்

என் உயிர் தோழியாக இருப்பாயா நீ

தேனாக்கம் --- **U . Pavithra**

# வாழ வரம் தாராயோ

சுத்தமான நீரைப்பருகவேண்டும்
சுகமான காற்றை நுகரவேண்டும்
வளமான மண்ணில் உலவ வேண்டும்
வரம் தருவாய் இறைவா எனக்கு என்றும்.

பொலித்தீன் தொல்லை நாட்டை விட்டு அகல வேண்டும்
பொதுவாய் எங்கும் பசுமை வேண்டும்
மரங்களெல்லாம் வானளாவ வளர வேண்டும்
மனிதநேயம் வையகத்தில் உயர வேண்டும்.

வகைப்படுத்தி கழிவகற்றும் எண்ணம் வேண்டும்
மரம் நடும் உள்ளம் மலர வேண்டும்
வீட்டுக்கொரு தோட்டமும் வளர்க்க வேண்டும்
விருப்புடன் வரம் தருவாய் வள்ளலாரே.

தேனாக்கம் --- Y . Elechana

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 1 | | | | | | | | |
| 3 | | 2 | | | | | | 5 | | 6 | |
| | | | | | | | | | | | |
| 4 | | 9 | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | 7 | 8 | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | 9 | | | | | | | | | |

# குறுக்கெழுத்து போட்டி

**இடமிருந்து வலம்**

1.இந்தியாவின் தேசிய பறவை

2.கறிக்கு சுவையூட்ட பயன்படும் வேர்

4.திருக்குறளை இயற்றியவர்

5.செந்நிறக்கோல் எனப்படுவது.

7.நரம்புக்கருவிகளில் ஒன்று.

9.நெத்தலி மீனில் காணப்படும் போசணைக்கூறு

**மேலிருந்து கீழ்**

1.இந்நிறப் பழங்களில் விற்றமின் **A** காணப்படும்

3.புவியின் உபகோள்.

5.கடிகாரத்தின் 3 மணி காட்டும் கோணம்.

6.குரங்கின் ஒத்தகருத்துச் சொல்.

8.வீட்டின் பாதுகாப்புக்கு உதவுவது.

| **இடமிருந்து வலம்** | **மேலிருந்து கீழ்** |
|---|---|
| 1.மயில் | 1.மஞ்சள் |
| 2.இஞ்சி | 3.சந்திரன் |
| 4.திருவள்ளுவர் | 5.செங்கோணம். |
| 5.செவ்வாய் | 6.வானரம் |
| 7.வயலின் | 8.யன்னல் |
| 9.கல்சியம் | |

தேனாக்கம் --- M . Raksana

# நல்லொழுக்கம்

உயரிய விழுமிய மே ஒழுக்கம் அதனை உயிரினும் மேலாய்ப் போற்றுவோம்.

நாட்டில் நற் சமூகம் உருவாக வேண்டுமானால் மக்களிடத்தில் நல்லொழுக்கம் பண்பு பரிணமிக்க வேண்டும். அது இல்லையேல் நற் சமூகம் எட்டாக்கனியாகி விடும். இன்று பாமரர் என்ன, படித்தவர் மத்தியிலும் நற்பண்பினைக் காண்பது அரிதாகி விட்டது. வள்ளுவப் பெருந்தகை

" அரம் போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட் பண்பில்லாதவர்"

என்று கூறியுள்ளார். ஒருவர் அரத்தைப் போல் அறிவுள்ளவராக இருந்தாலும் அவரிடம் மக்கட் பண்பும் ஒழுக்கமும் இல்லை யென்றால் கற்றவர் என்று கூறுவதில் அர்த்தமில்லை அல்லவா? பண்பில்லாதவர் உயிரற்ற ஜீவனுக்கே உரித்துடையவர். மனிதருக்கும் விலங்குகளுக்கும் இடையேயான வேற்றுமை என்ன? ஐவறிவுடையது மிருகம், ஆறறிவுள்ளவர் மனிதர் இதனை பகுத்தறிவு எனக் கூறுவர்.பகுத்து அறியக் கூடிய பக்குவம் நிறைந்த பேசத் தெரிந்த ஆற்றல் மிக்கவந்தான் மனிதன்.இம் மனிதன் இப்போ எங்கே சென்று கொண்டிருக்கின்றான் ஆக்க பாதையை நோக்கியா? அழிவுப் பாதையை நோக்கியா?

ஏய் மனமே நீ சாட்சி சொல் இன்று மனிதனிடம் மனித நேயத்தைக் காணமுடியவில்லையே அது ஏன்? மனிதனும் தெய்வமாகலாம் என மறைகள் எடுத்தியம்புகின்றன. வள்ளுவப் பெருந்தகையோ மக்களைக் கொண்டுள்ள சமூதாயம் ஒழுங்காக இயங்க வேண்டும். இதற்கு மூல காரணம் ஒழுக்கமே.

ஒழுக்கம் பேணாவிட்டால் வாழ்க்கையே சீரழிந்து விடும். பாடசாலையில், குடும்பத்தில், சமூகத்தில் ஏன் பிரச்சினைகள் உருவாகின்றன. காரணம் என்ன? ஒழுங்கில்லாத ஒழுக்கமே என்றால் அது மிகையாகாது. திருக்குறள் மனிதர்மம் காலத்திலும், நாலடியார் போன்ற புகழ்பெற்ற நூல்கள் சமூக ஒழுக்கத்துக்கு முக்கியம் கொடுப்பதை நாம் மறந்துவிட முடியாது.

சர்வதேச ரீதியாக இன்று தோன்றியுள்ள அமைதி இன்மைக்கும் குழப்பத்திற்கும் பிரதான காரணம் என்ன? நடத்தைப் பண்புகளை பேணி நடவாமையாகும். மாணவர்களின் நலனைப் பேணி நடப்பவர் பெற்றோரும் ஆசிரியர்களுமே. உயிருடன் உறவாடுபவர்கள் இவர்கள். உயிருக்கு உரமூட்டும் பொக்கிஷங்கள். அவர்களின் வாழ்க்கைப் பாதையிலே தான் மாணவர்கள் செல்கின்றார்கள். ஒவ்வொருவரும் மனிதத்துவத்தை மதித்து ஒத்துழைத்தால் தான் இந்தச் சமுதாயம், உலகம் ஒழுங்காக இயங்கும் இல்லை என்றால் அனைவரின் எதிர்காலமும் கேள்விக்குறிதான்.

இன்று பல தரப்பட்ட சமூக நிறுவனங்கள் காணப்படுகின்றன. இவை யாவுமே மனிதன் கொண்டுள்ள சுய நலத்தை விரட்டியடித்து பொது நலம் என்னும் உயர்ந்த பண்பைப் புகுத்துவதற்காக அமைந்தவை. இவை இக் காலகட்டத்திற்குப் பொருத்தமானதே. எனவே பாலர் முதல் விருத்தர் வரை பண்டிதர் முதல் பாமரர் வரை அனைவருமே ஒழுக்கத்தைப் போற்றிப் பேணி உயர்ந்த, ஓர் உன்னதமான பண்புமிகு நற் சமூகத்தை மலர வைப்போமாக.

"ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்"

தேனாக்கம் --- K . Nithosha

# மாம்பழக்குருவி



நான் ஒரு அழகான பறவை. என்னை எல்லோரும் விரும்பி வளர்ப்பார்கள். எனது நிறம் மஞ்சள் ஆகும். என்னை மாம்பழத்தான் என்று சொல்வார்கள். ஏன் என்றால் நான் மாம்பழத்தை போல் மஞ்சள் நிறம் உடையவன்.

நான் மாம்பழத்தை விரும்பி உண்பேன். நான் எப்பொழுதும் பலவகையான மாம்பழங்களை விரும்பி உண்பேன். பழம் தான் எனது உயிர் தோழன் எனது இனம் தற்போது அருகிவருவதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை எனக்கு மிகவும் வேதனையை தருகிறது.

தேனாக்கம் --- Y . Elechana